தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழக மேலாண்மைக் குழுமத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினரின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகளாகும்.

மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினரின் பதவிக் காலம் 7-2-2016 வரை ஆகும்.

திருவள்ளுவர் பல்கலைக்கழக கல்விக் குழு மற்றும் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவை ஆகியவற்றிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பதவிக் காலம் 25-3-2014 வரை ஆகும்.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அத்துடனோடு பல்கலைக்கழகத்தின் அமைப்பில் அவர் வகித்து வரும் உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

நண்பகல் 12-00

திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாண்டுகள் முத்தான பல திட்டங்களை மக்களுக்குத் தந்து, நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மாபெரும் வெற்றியைத் தந்த மாதரசியே, கடந்த ஆட்சியாளர்களால் பறிபோன தமிழர்களின் உரிமையை மீட்டெடுத்த பேரரசியே, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் விரும்பி போற்றும் எங்கள் குலவிளக்கே, மாசற்ற மணிவிளக்கே, ஏழை வாழ்விலே ஒளிபெற்ற நாள்தோறும் பல நல்ல திட்டங்களைத் தரும் திராவிடத் திருவிளக்கே, என்றும் எங்கள் குடும்பத்தை வாழவைக்கும் எங்கள் இதய தெய்வமே, இந்தியத் திருநாட்டில் வாழும் மனித தெய்வமே, கழகத்தின் நிரந்தரப் பொதுச்

செயலாளர் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, வைரவிழா கண்ட தமிழக சட்ட மன்றப் பேரவையின் அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவராக எனக்கு வாய்ப்பளித்தமைக்கு, கருணையுள்ளம் கொண்ட தாயின் பொற்பாதங்களில் கோடானு கோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013-2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை அரசு உறுதிமொழிக் குழுவின் 97 முதல் 103 வரையிலான ஆறு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் ஆர். சின்னசாமி, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர்.

திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வணங்கும் தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். இந்திய அரசியல் வரலாற்றில் கூட்டணியில்லாமல் தேர்தலில் நிற்கமுடியாது என்ற நிலையை 1959-ல் கேரளாவிலே அன்றைய அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவி திருமதி இந்திரா காந்தி அவர்கள் முதன்முதலில் உருவாக்கினார்கள். அன்றைக்கு கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆட்சி நடத்திய கேரளாவில் நம்பூதிரிபாட் அவர்களை வீழ்த்துவதற்கு காங்கிரஸ் கட்சி கூட்டணி அமைத்தது. அதற்குப் பின்னால், 1967-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியை வீழ்த்துவதற்கு இராஜாஜியை உள்ளடக்கி கூட்டணியை அமைத்தார்கள். இந்த 41 ஆண்டுகளில், பாராளுமன்றத் தேர்தலாக இருந்தாலும், சட்டமன்றத் தேர்தலாக இருந்தாலும் தனியாக கட்சிகள் நிற்கமுடியாது என்ற நிலை நிலவி வந்தது. அந்தக் கூட்டணி தர்மத்தை மாற்றி 2014-ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தன்னந்தனியாக நின்று (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றி பெறமுடியுமென்று இந்தியாவுக்கு வழிகாட்டிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பாராட்டி, நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.